R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2018-2020
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2018-2020
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
February 2020



கிறிஸ்துவின் வசனம் மாத இதழ் மற்றும்
ஆவிக்குரிய புத்தகங்களை பெற்றுக்கொண்டு
வசனமாகிய விதையை விதைக்கப்புறப்படும் தமிழக ஊழியர்கள்



கிறிஸ்துவின் வசனம்
பாடல் புத்தகம் வெளியீடு



Cell : 94435 58041
6379350509
Phone : 04543 263 278
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

**Our TV Program:**
Every Monday 6.00 P.M on Tamilan TV &
Every Saturday 8.00 P.M on Nambikkai TV
YouTube: the word of christ

To

Postman Remarks (If Undelivered):
- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 20 | பிப்ரவரி 2020 | கனி 3

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16



THE WORD OF CHRIST



ஆசிரியர்
B. அர்ஜுனன்

# வேதபாடம்




"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்;
அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று
எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச்
சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39

பாடம் : 3
தலைப்பு : ஜீவவசனம் – The Word of Life
ஜீவமார்க்கம் – The Path of Life
வேத வாசிப்பு : நீதி.6:1-6


**ஜீவவசனம் – The Word of Life**

| | |
|---|---|
| 1. நித்திய ஜீவவசனங்கள் உம்மிடத்தில் | - யோவா.6:68 |
| (எ.டு) வானமும் பூமியும் ஒழிந்து... | - மத்.24:35 |
| 2. தேவதூதன் இந்த ஜீவவார்த்தைகள் | - அப்.5:20 |
| (எ.டு) தினந்தோறும் தேவாலயத்தி... | - அப்.5:42 |
| 3. ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு | - பிலி.2:14-16 |
| (எ.டு) நீங்கள் உலகத்துக்கு வெளிச்... | - மத்.5:14 |

**ஜீவமார்க்கம் – The Path of Life**

| | |
|---|---|
| 1. ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்... | - சங்.16:11, அப்.2:28 |
| (எ.டு) இயேசுவானவர் தமது மாம்ச... | - எபி.10:19-22 |
| 2. நீ ஜீவமார்க்கத்தை சிந்தித்துக்கொள்ளா... | - நீதி.5:6 |
| (எ.டு) ஒரு மாடு அடிக்கப்படும்படி | - நீதி.7:22-23 |
| 3. ஜீவமார்க்கத்தை உண்டுபண்ணி | - எபி.10:19 |
| (எ.டு) தங்களுடைய மார்க்கத்தை | - அப்.24:14-16, 25:19 |


YouTube




the word of christ
இருபத்தி நான்கு மணிநேரமும்
உலகமெங்கும்
YouTube
வழியாக
பார்த்து சத்தியத்தை
அறிந்துகொள்ளுங்கள்
தொடர்புக்கு
9443558041
6379350509



THE WORD OF CHRIST
Monthly Magazine
Editor
B.ARJUNAN


திவேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




## வேத அறிவுப் போட்டி எண்: 234

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. அவர் (இயேசுவானவர்) மரித்தது, பாவத்திற்கென்று எத்தனை தரம் மரித்தார்?
2. நீங்கள் அபத்தமானதைச் சொல்லி, பொய்யானதைத் தரிசிக்கிறபடியினாலே, இதோ, நான் உங்களுக்கு எவ்விதமானவர் என்று கர்த்தர் சொல்லுகிறார்?
3. உங்களில் பிரிவினைகள் உண்டென்று கேள்விப்படுகிறேன்; அதில் சிலவற்றை நம்புகிறேன் என்ற அப்போஸ்தலன் யார்?
4. கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியோடே சொல்லிய வருஷங்களின் தொகையைப் புஸ்தகங்களால் அறிந்துகொண்டேன் என்ற தீர்க்கன் யார்?
5. நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத எவரை நமக்காகப் பாவமாக்கினார்?
6. என் ஜனமல்லாதிருந்தவர்களை நோக்கி நீ என் ஜனமென்று சொல்லுவேன் அவர்கள் என்னை என்னவென்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்?
7. கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன் என்ற அப்போஸ்தலன் யார்?
8. யுத்தத்துக்கு ஆயத்தம்பண்ண உங்கள் மண்வெட்டிகளைப் பட்டயங்களாகவும், உங்கள் அரிவாள்களை எவைகளாகவும் அடியுங்கள் என கர்த்தர் சொன்னார்?
9. நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே நமக்குச் செய்ய வல்லவருக்கு எதிலே, எவர்மூலமாய் தலைமுறை தலைமுறைக்கும் மகிமை உண்டாகவேண்டும்?
10. காற்றை கர்த்தர் சிருஷ்டித்தாரா?

## வேதாகம ஆய்வு... 19

### ஆசேர்



Asher

1. ஆசேர் என்றால் பாக்கியவான் என்று அர்த்தம்.
2. சில்பாள் பெற்ற குமாரன் – ஆதி.35:26
3. புத்திர பாக்கிய முடையவன் – உபா.33:24
4. இவனுடைய கோத்திரத்தில் 41,500 பேர் – எண்.1:41
5. புத்திரரில் யுத்தசேவகர் 40,000 – 1நாளா.12:36
6. அன்னாள் ஆசேரின் கேத்திரத்தாள் – லூக்.2:36
7. முத்திரை போடப்பட்டவர்கள் – வெளி.7:6

சிறுவர் பகுதி

## அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்

வேதபகுதி:யோவான் 3:30-33



அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும் என்று சொன்னது யார் தெரியுமா? சொல்லுங்க பார்க்கலாம். மோசே. இல்லை. அது புதிய ஏற்பாட்டு புஸ்தகத்தில் உள்ள ஒரு நபர். ஆ..... எனக்கு தெரியும். எங்கே சொல்லு பார்க்கலாம், யோவான்ஸ்நானகன். மிகவும் சரியாய் சொன்னாய். அவன்தான் இப்படி இயேசுவைக் குறித்து சொன்னான். இன்றைக்கு அநேகர் நாம டெவலப் ஆனா போதும் என்று சொல்லுவாங்க இல்லையா, ஆனா யோவான்ஸ்நானகன் அப்படியல்ல! நான் அவருடைய பாதரட்சையின் வாரைக்கூட அவிழ்க்கிறதற்கு பாத்திரனல்ல என்று தாழ்த்தி அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும் என்றான்.

ஏனென்றால் பூமியிலிருந்து உண்டானவன் பூமிக்கடுத்தவைகளைப் பேசுகிறான். இயேசுவோ பரலோகத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவர். தாம் கண்டதையும் கேட்டதையும் சாட்சியாகச் சொல்லுகிறார். அவருடைய சாட்சியை ஏற்றுக் கொள்ளுகிறவன் தேவன் சத்தியமுள்ளவரென்று முத்திரைபோட்டு நிச்சயப்படுத்துகிறான். நீங்கள் அவருடைய வசனங்களை புதிய ஏற்பாட்டு புஸ்தகத்தில் உள்ள நான்கு சுவிசேஷங்களிலும் வாசிக்கலாம். வாசித்து அவரை உங்கள் ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக் கொண்டு உங்களுடைய மனதில் முத்திரை போட்டு நிச்சயப்படுத்திக் கொள்வீர்களா? ஓ அப்படியே செய்வோம். மிக நல்ல பிள்ளைகள். உங்களைத்தான் அவர் ரொம்பவும் நேசிக்கிறார்.

நாமும் யோவான்ஸ்நானகன் சொல்வதைப்போல சொல்வோமா? ஓ சொல்வோமே. அவர் பெருகவும் நாம் சிறுகவும் வேண்டும். சரி, தம்பி தங்கைகளா, மீண்டும் அடுத்த மாதம் சிறுவர் பகுதியில் உங்களை சந்திக்கிறேன். ஒவ்வொரு மாதமும் சொல்லுகிற மனப்பாட வசனத்தை படிக்க மறந்திடாதீங்க!

**மனப்பாட வசனம்:**

**“குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்”(யோவான்3:36)**


'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' மாத இதழை ஒவ்வொரு மாதமும் 10ம் தேதியே Whatsapp மூலம் பெற்றுக்கொள்ள 6379350509 என்ற எண்ணோடு தொடர்பு கொள்ளுங்கள்





# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 20 பிப்ரவரி -2020 கனி - 3


ஆசிரியருரை

## உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துங்கள்
## Establish Your Heart



நம்முடைய இருதயம் சிலவேளைகளில் சோர்ந்துபோகிறது. சோர்ந்துபோவதால் பலவிதமான வேலைகள் பாதிக்கப்படுகின்றன. நம்மை சந்திக்க வருகிறவர்களிடம் முகம்கொடுத்து சரியாக பதில் சொல்லாமல், பார்த்துக்கொள்ளலாம் அல்லது மற்றொருநாள் பார்க்கலாம் என்று சொல்லி அவர்களை அனுப்பிவிடுகிறோம். இவைகளுக்கு நம்முடைய சோர்வு மிகப்பெரிய காரணமாயிருக்கிறது. யாக்கோபு சொல்லுகிறார்; "நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள்; கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே" (யாக்.5:8). இருதயத்தை ஸ்திரப்படுத்துவது என்பது ஒரு சாதாரண விஷயமல்ல. "எப்படியெனில், இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச் சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டுவரும்" என்று மத்.15:19-ல் வாசிக்கிறோம். பொல்லாதவைகளின் பிறப்பிடமாக இருதயமானது இருக்கிறது. இதை முதலாவது சரிசெய்யும்போது எல்லாமே சரியாகிவிடும். இதை சரிசெய்வது ஒரு வைத்தியனாலோ அல்லது ஒரு விஞ்ஞானியாலோ முடியாது. பரிசுத்த வேதவசனமே அவைகளை சரிசெய்யமுடியும்.

இருதயங்களை அறிகிறவர் பரமவைத்தியர் நம்முடைய பிதாவாகிய தேவன். அவர் ஒருவரே இருதயங்களை அறியக்கூடியவர். மற்றொருவராலும் இருதயங்களை அறியமுடியாது. எரேமியா என்ற தீர்க்கன் சொல்லும்போது; "எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்?" என்று கேள்வி எழுப்புகிறார் (எரே.17:9). சரீரத்தில் உள்ள மற்ற அவயவங்களைப் பார்க்கிலும் இது மகா கேடுள்ளது எனக் காண்கிறோம். ஒரு மனிதன் தவறுசெய்ய முதலாவது தன்னுடைய இருதயத்திலே திட்டமிடுகிறான், பின்பு அதை நிறைவேற்றுகிறான். இதை ஒவ்வொரு நாளிதழிலும் படிக்கின்றோம்.

புதிய ஏற்பாட்டுகாலத்தில் முதல் நூற்றாண்டு சபையில் இருந்த அனனியா, சப்பீராளைக்குறித்து பார்க்கும்போது; பேதுரு அனனியாவைநோக்கி: "அனனியாவே, நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? அதை விற்குமுன்னே அது உன்னுடையதா யிருக்கவில்லையோ? அதை விற்றபின்பும் அதின் கிரயம் உன் வசத்திலிருக்க வில்லையோ? நீ உன் இருதயத்திலே இப்படிப்பட்ட

எண்ணங்கொண்டதென்ன? நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய்சொன்னாய் என்றான்'' (அப்.5;3,4). இந்த அனனியா கர்த்தருடைய போதனைகளை நன்கு அறிந்தவன். ஆனாலும் அவனுடைய இருதயம் அவனை வஞ்சித்தது. அவனுடைய இருதயத்தை சாத்தான் பொய்யினால் நிரப்பினான். நிலத்தில் விற்ற ஒரு பங்கை வஞ்சித்து வைத்து தன் மனைவி அறிய பொய்சொன்னான். அவன் இப்படி பொய் சொன்னதற்கு காரணம் என்னவாயிருக்கும்? அவன் ஒருவேளை அப்போஸ்தலர்களை நம்பாமல் தனக்காக ஒரு பங்கை எடுத்துவைத்திருக்கக்கூடும் அல்லது எல்லாமே செலவு செய்து விட்டால் இந்த பணத்தை வைத்து ஜீவியம் செய்யலாம் என்று எண்ணியிருக்கக்கூடும். பொய் சொல்லுகிறவர்கள் ஒரு நோக்கத்தை உடையவர்களாக இருக்கிறார்கள். அந்த நோக்கம் பிசாசு கொடுக்கும் ஆலோசனையாக இருக்கிறது. இருதயம் சிலவேளைகளில் அவிசுவாச எண்ணங்களை பிறப்பிக்கும். அப்படிசெய்யும்போது மற்ற அவயவங்களும் தேவனுக்கு விரோதமாக செய்யத்தூண்டப்படும். இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு நேயரே, உங்களுடைய இருதயம் எப்படிப்பட்டவைகளை சிந்தித்துக்கொண்டிருக்கிறது. முதல் நூற்றாண்டு சபையில் வாழ்ந்த இந்த அனனியா சப்பிராள் பொல்லாத சிந்தனைகளுக்கு நேரே இழுப்புண்டு பொய்சொன்னார்கள். அவர்களுடைய இருதயம் அவர்களை மோசம்போக்கியது. ஆகையால் அன்பான சகோதரனே, சகோதரியே நீங்கள் உங்களுடைய இருதயத்தில் வஞ்சிக்கப்பட்டு மோசம்போகாதிருக்க உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துங்கள்.

**ஒரு மனிதனுடைய இருதயத்தின் நினைவு எப்படிப்பட்டதாயிருக்கிறது?** நித்தமும் பொல்லாததாயிருக்கிறது எனக் காண்கிறோம். "மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு, தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காக கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது'' (ஆதி.6;5,6). மனிதனை பூமியில் உண்டாக்கின கர்த்தர் மனஸ்தாபப்பட்டார். அந்த அளவு மனிதனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது. இப்பொழுதும் அவைகளை நாம் காணமுடிகிறது. ஒரு தோட்டக்காரன் நல்ல தரமுள்ள விதைகளை விதைத்திருக்கும்போது அது வளர்ந்து கனிகொடுக்கும் சமயத்தில் ஆகாத கனிகளைக் கொடுத்தால் அந்த தோட்டக்காரனின் மனம் எந்த அளவு வேதனை கொள்ளும்.

அதைப்போல தேவன் மனிதனை மிகவும் நேர்த்தியாக உண்டாக்கினார். அவனுக்கு தமது ஜீவசுவாசத்தை நாசியில் ஊதினார். அவன் ஜீவஆத்துமாவானான். இப்பேர்பட்ட மனிதன். அனைத்து ஜீவராசிகளிலும் விசேஷித்த விதமாக உண்டாக்கப்பட்டவன் அவனுடைய நினைவுகள் நித்தமும் பொல்லாதவைகளாக இருந்தால் உண்டாக்கினவர் எவ்வளவு வேதனை கொள்ளுவார் என்பதை எண்ணிப்பாருங்கள். பூமியில் மனிதர்கள் தங்களை கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள், பொல்லாதவர்களுடைய கூட்டம் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இப்படிப்பட்ட உலகத்தில் நம்முடைய இருதயத்தை ஸ்திரப்படுத்திக்கொண்டு கர்த்தருடைய சித்தம் செய்ய முற்படவேண்டும். "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்'' என மத்.5:8-ல் மலைப்பிரசங்கத்தில் கர்த்தர் சொல்லியிருக்கிறார். நம்முடைய இருதயத்தில் நாம் சுத்தமுள்ளவர்களாக இருக்கும்போது பாக்கியவான்களாக இருப்போம். அங்கே அசுத்தத்திற்கு இடமில்லை. யோபு என்ற தாசனைக்குறித்து வோதகமம் இப்படியாக சொல்லுகிறது; அவன் உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாயிருந்தான். அவனுக்கு ஏழு குமாரரும், மூன்று குமாரத்திகளும் பிறந்தார்கள். அவன் குமாரர்,



வாக்குப்பண்ணியுள்ளார். இந்த ஆசீர்வாதம் பெரிதல்லவா? அவர் இந்த பூமியிலே நம்மோடிருப்பாரானால், மறுமையில் மேலான இடத்தில் அவரோடுகூட நாம் இருக்கப்போவது அதிக நிச்சயமல்லவா? அன்பு சகோதரியே வரப்போகிற மேலான ஆசீர்வாதத்தை நினைத்து நம்முடைய பழைய செய்கைகளைக் களைந்து போடுவோமாக!

மேலும் மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட **புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்**'' (எபே.4:24) ஆம். எவ்வாறு புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுவது? மெய்யான அதாவது உண்மையான நீதியிலும், பரிசுத்தத்திலும் நம்மை சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய் மாறும்போது புதிய மனுஷனைத் தரித்துகொள்கிறோம். அதாவது ஆதாமின் கீழ் பாவத்திற்குட்பட்ட நம்முடைய பழைய மனுஷன் அவரோடுகூடச் (இயேசுவோடுகூட) சிலுவையில் அறையப்படும் போதும் புதிய மனுஷனைத் தரித்துக்கொள்வோம். பவுல் இதனையே ''கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும் பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்...'' (கலா. 2:20) என்கிறார். ஏனெனில் ''அவரே (இயேசுவே) தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்.''(1கொரி.1:31) இப்படியாக நீதியும் பரிசுத்தமுமாயிருக்கிற இயேசுவைத் தரித்துக்கொள்ளும்போது கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே நமக்குள்ளும் குடிகொள்ள ஆரம்பிக்கிறது. இப்படியாக நாம் புதிய மனுஷனைத் தரித்துக்கொள்கிறோம்.

அன்பான சகோதரியே, இதுவே தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கிற ஒன்றாகும். வீழ்ந்துபோன ஆதாமின் பாவசுபாவத்திலிருந்து நம்முடைய மனதையும், நம்முடைய செய்கைகளையும் களைந்து போட்டு புதிய மனுஷனைத் தரித்துக்கொள்வோம். மீண்டும் ஏதேனின் (The Happy Place) வாழ்விற்கு திரும்ப, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தமே பரிகாரமாயிருப்பதினால் அவரை விசுவாசித்து, அவரே ஜீவனுள்ள தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்போது பரிசுத்தஆவியின் வரத்தைப்பெற்று புதிய மனுஷியாக மாறுவீர்கள். பழையவைகள் எல்லாம் ஒழிந்துபோம். எல்லாம் புதிதாகும். அப்போது கர்த்தர் தம்முடைய சபையிலே உங்களை சேர்த்து. போஷித்துக் காப்பாற்றுவார். அவருடைய மந்தையில் சேர்ந்து உள்ளும் புறம்பும் மேய்ச்சலைக் கண்டு நித்திய ஆசீர்வாதம் பெற கர்த்தர் தாமே உதவிசெய்வாராக!

**நடப்புச்செய்திகள்**

❒ பூமியில் மிக நீண்ட தூரம் நடந்து செல்லக்கூடிய ஒற்றை தூரம் எவ்வளவு என்பதை கூகுள் மேப் மூலம் கணித்து சுவாரசியமாக பொறியியல் நிறுவனம் ஒன்று வெளியிட்டுள்ளது. மொத்தம் 14,334 ஆயிரம் மைல்கள்.

❒ இனி ரயில்களிலும் ஒன்டே பாஸ்: எத்தனை முறை வேண்டுமானாலும் போகலாம். தெற்கு ரெயில்வே சென்னை கோட்டம் சார்பில் பாஸ்கள் அறிமுகம் செய்துள்ளது.

இன்னும் இது போன்ற அநேக காரியங்களை நம்மிலிருந்து அப்புறப்படுத்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நம் உள்ளத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதுமாத்திரமல்ல, நம்முடைய இப்பேர்ப்பட்ட பாவங்கள் மன்னிக்கப்பட்டு உள்ளத்தில் புதிதான ஆவியினை பெற ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவேண்டும். அப் 2:38 “நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்” என்கிறது. அப்படியானால் ஞானஸ்நானத்தின் மூலம் நாம் உள்ளத்திலே பரிசுத்த ஆவியாகிய அந்த புதிதான ஆவியுள்ளவர்களாக மாறுவோம். அப்போது பழையவைகள் ஒழிந்துபோகும். இவ்வாறாக நம்முடைய மனம் புதிதாகி நாம் நம்முடைய பழைய பாவநிலையிலிருந்து மாறி மறுரூபமடைவோம்.

இதையே கொலோசெயர் 3:8-9ம் கூட “இப்பொழுதோ கோபமும் மூர்க்கமும் பொறாமையும் உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள். ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; **பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு.”** என வலியுறுத்துகிறது. மேற்கூறப்பட்டுள்ள இத்தகைய செய்கைகள் நம்மிடம் இருக்கின்றனவா? அப்படியிருக்குமானால் அவைகளை களைந்து போட இப்போதே முயற்சிப்போம். கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளை சுதந்தரித்துக்கொள்ள நாம் அழைக்கப்பட்டுள்ளோம். பூமிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற அநேகர் அடித்துக்கொள்ளுகின்றனர். ஓயாது தங்களுடைய மேன்மையையே நாடி மற்றவர்களையும் காயப்படுத்தவோ அல்லது பிறருக்குத் தீமைசெய்யவோ துணிகின்றனர். அன்பு சகோதரியே, இழிவான ஆதாயத்தை நாடிப் போவாயானால், தேவனுடைய வலது பாரிசத்திலுள்ள மேலானவைகளை எப்படி பெற்றுக்கொள்ளுவாய்? கிறிஸ்துவுக்குப் பிரியமில்லாத உங்களுடைய செய்கைகளினால் மேலான ஆசீர்வாதத்தை இழந்துவிடாதீர். லோத்தின் மனைவி அன்று பூமிக்குரியவைகளைத் திரும்பிப்பார்த்து உப்புத்தூணாகி மேலான காரியத்தை இழந்தாள். ஒருவேளை வரக்கூடிய பிரச்சனைகளின் அழுத்தத்தினாலும், பாரத்தினாலும் கிறிஸ்துவுக்குப் பிரியமான செய்கைகளை என்னால் செய்யமுடிகிறதில்லை. கர்த்தரை நம்பி இத்தனை நாட்களாக என் துன்பமும் துயரமும் எங்கே ஒழிந்தன, விரும்பாத காரியங்களே என் வாழ்வில் நடக்கிறது, அநேக இழப்புகளையும், வியாதிகளையுமே அனுபவிக்கிறேன் என்று அங்கலாய்த்துக்கொண்டிருக்கிறீர்களா? அன்று நகோமி தன்னுடைய புருஷனையும், தன்னுடைய குமாரர்களையும் இழந்தாள். நான் நிறைவுள்ளவளாய்ப் போனேன்; கர்த்தர் என்னை சிறுமைப்படுத்தி, சர்வவல்லவர் என்னை கிலேசப்படுத்தியிருக்கையில்.”(ரூத்.1:21) என்று அங்கலாய்த்துக் கொண்டாள். அன்புசகோதரியே, நாம் கர்த்தரை ஏற்றுக்கொண்டவுடனே, கர்த்தர் எல்லாவித உலக ஆசீர்வாதங்களையும் குறைவில்லாமல் தருவேன் என நமக்கு வாக்குப்பண்ணவில்லை. ஆனால் ‘தேவன் நம்மோடிருப்பதாக’ (மத். 1:23)



அவனவன் தன்தன் நாளிலே தன்தன் வீட்டிலே விருந்துசெய்து, தங்கள் மூன்று சகோதரிகளையும் தங்களோடே போஜனம்பண்ணும்படி அழைப்பார்கள். "விருந்துசெய்கிற அவரவருடைய நாள்முறை முடிகிறபோது, யோபு; ஒருவேளை என் குமாரர் பாவஞ்செய்து, தேவனைத் தங்கள் இருதயத்திலே தூஷித்திருப்பார்கள் என்று சொல்லி, அவர்களை அழைத்தனுப்பி, பரிசுத்தப்படுத்தி, அதிகாலமே எழுந்து, அவர்கள் எல்லாருடைய இலக்கத்தின்படியேயும் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்துவான்; இந்தப்பிரகாரமாக யோபு அந்நாட்களிலெல்லாம் செய்துவருவான்" (யோபு.1:5). தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுடைய பிள்ளைகள் எப்படியிருப்பார்கள் அவர்களும் அவனைப்போலவே இருப்பார்கள் என்று தான் நாம் நினைப்போம். ஆனால் இங்கு யோபு தேவனுக்கு பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனாயிருந்தாலும், அவனுடைய பிள்ளைகள் ஒருவேளை தேவனைத் தூஷித்திருப்பார்கள் என்று சொல்லி அவர்களை அழைத்தனுப்பி பரிசுத்தப்படுத்தியிருக்கிறார். இவ்விதமான பெற்றோர்களை பார்த்திருக்கிறீர்களா? தங்களுடைய பிள்ளைகள் பாவம் செய்திருந்தாலும் அவன் ஒன்றும் அப்படிச்செய்திருக்கமாட்டான் என்று ஆணித்தரமாக சொல்லுவார்கள். அப்படிப்பட்ட பெற்றோர்களையே நாம் காண்கிறோம். இருதயமானது பொல்லாதவைகளை உருவாக்கும் பிறப்பிடமாக இருக்கிறது என்பதை மறந்துபோகக்கூடாது. ஆகையால் யோபு தன்னுடைய பிள்ளைகள் தேவனைத் தூஷித்திருப்பார்கள் என்று சொல்லி அவன் அவ்வப்போது அவர்களை பரிசுத்தப்படுத்திக்கொண்டு வந்தான். நீங்களும் உங்களுடைய பிள்ளைகளை யோபுவைப்போல பாதுகாக்கவேண்டிய கடமையுள்ளவர்களாயிருக்கிறீர்கள் என்பதை மறந்துபோகவேண்டாம். பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து எனவேதம் நமக்குபோதிக்கிறது. ஆகையால் உங்கள் பிள்ளைகளின் இருதயத்தை ஸ்திரப்படுத்தி பொல்லாத சிந்தையை மாற்றிப்போடுங்கள்.

**மூன்றாவது நம்முடைய இருதயத்தை ஆயத்தப்படுத்தவேண்டும்.** தாவீது சொல்லுகிறார்; "என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது, தேவனே, என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது; நான் பாடிக்கீர்த்தனம்பண்ணுவேன்" (சங்.57:7). எந்த ஒருவேலைக்கும் ஆயத்தம் மிக முக்கியமானது. ஆயத்தமில்லாதவேலை அது சரிவர நிலைப்பதாது எனக் காண்கிறோம். ஒரு வேலையை சிறப்பாக செய்ய ஆயத்தம் அவசியம். தேவனை ஆராதிக்கும்படியாக இருக்கிறவர்கள் முந்தினநாளே ஆயத்தப்படுகிறார்கள். அப்படிச்செய்யும்போது அவர்கள் சிறப்பாக தேவனை ஆராதிக்கமுடியும். தாவீது என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது என்கிறார். அவர் எப்பொழுதும் தேவனைத் துதிக்க தன் இருதயத்தை ஆயத்தமாக வைத்திருந்தார். மேலும், "கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களே, நீங்களெல்லாரும் திடமனதாயிருங்கள், அவர் உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்" என்கிறார் (சங்.31:24). காத்திருப்பது இருதயத்தை இளைக்கப்பண்ணும். ஆனால் தாவீது கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களே, நீங்களெல்லாரும் திடமனதாயிருங்கள் என்கிறார். இஸ்ரவேலர் எகிப்திலிருந்து கானானுக்குப் போய் சேர நாற்பது வருடங்கள் ஆனது அதுவரை அவர்கள் காத்திருந்தார்கள். ஆபிரகாம் ஈசாக்கை பெற நூறு வயதுவரை காத்திருந்தான். அதைப்போல அநேகர் தேவனுடைய வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களைப் பெற காத்திருந்தனர். மேலும் அவர்கள் திடமனதாயிருந்தனர். அதாவது நம்பிக்கையோடிருந்தனர். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள் என்ற வசனத்தின்படி திடமனதுடனே காத்திருந்தனர். அப்படிப்பட்டவர்களை தேவன் ஸ்திரப்படுத்துகிறார்.

மேலும், "யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்

களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே" என எபி.12:14-ல் வாசிக்கிறோம். சமாதானமாயிருக்கும்படியே தேவன் நம்மை அழைத்திருக்கிறார். இயேசுவும் சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன் என்றார். இந்த சமாதானத்தை எந்த அளவு நாம் கைக்கொள்ளுகிறவர்களாக இருக்கிறோம்? வசனம் யாவரோடும் சமாதானமாயிருக்கவும் பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள் என போதிக்கிறது. இதை நம்முடைய வாழ்க்கையில் கைக்கொள்ளாவிட்டால் நம்முடைய இருதயம் பொல்லப்பானவைகளை சிந்திக்கும் அதை செயல்படுத்த தூண்டும். சமாதானமில்லாமலும், பரிசுத்தமில்லாமலும் கர்த்தரை ஒருவரும் தரிசிக்கமுடியாது எனக் காண்கிறோம். தேவன் பரிசுத்தர் அவரைப்போல எல்லோரும் பரிசுத்தமாகவேண்டும் என்பதுவே தேவனுடைய விருப்பமாயிருக்கிறது. ஆகையால் பரிசுத்தமுள்ளவர்களாயிருக்க நாடுங்கள். பரிசுத்தம் நம்மை பரலோகம் கொண்டு சேர்க்கும். அசுத்தம் நம்மை அழிவுக்கு கொண்டுபோய் சேர்க்கும். நீங்கள் எதை நாடிப்போகிறீர்கள்? பரிசுத்தத்தையா அல்லது அசுத்தத்தையா, இன்றே தீர்மானம் செய்யுங்கள். ஒருவரும் கெட்டுப்போவது தேவனுடைய சித்தமல்ல எனக் காண்கிறோம். நாம் எல்லோரும் இரட்சிக்கப்படவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார். ஆகையால் உங்கள் இருதயத்தை பரிசுத்த சிந்தைக்கு நேராக ஒருமுகப்படுத்துங்கள். உங்களுடைய இருதயத்தை ஸ்திரப்படுத்துங்கள். இழிவான இச்சைகளுக்கு இடங்கொடாமல், பரிசுத்தமான வசனங்களை உங்களுடைய இருதயங்களில் எழுதுங்கள். வானமும் பூமியும் அதில் உள்ள யாவும் ஒருநாளில் அழிந்துபோகும். ஆனால் கர்த்தருடைய வசனங்களோ ஒருக்காலும் ஒழிந்துபோகாது என வேதத்தில் வாசிக்கிறோம். இச்செய்தியில் நாம் தியானித்தபடி உங்களுடைய இருதயத்தை பொல்லாத சிந்தனைகளுக்கு இடங்கொடாதிருங்கள். உங்களுடைய இருதயத்தின் நினைவுகள் பரிசுத்தமுள்ளவைகளாக இருக்கட்டும். உங்களுடைய இருதயத்தில் ஆயத்தமாக இருந்துகொண்டு கர்த்தரைத் துதியுங்கள்.

**மனுஷனுடைய வழியெல்லாம் அவன் பார்வைக்குச் செம்மையானவைகளா?**

ஆம், "மனுஷனுடைய வழியெல்லாம் அவன் பார்வைக்குச் செம்மையாகத் தோன்றும்; கர்த்தரோ இருதயங்களை நிறுத்துப்பார்க்கிறார்" (நீதி.21:2). தலையிலுள்ள முடியை எண்ணிவைத்திருக்கிறவருக்கு இருதயத்தை நிறுத்துப்பார்ப்பது பெரியகாரியமல்ல. கர்த்தர் ஒவ்வொருவருடைய வழியையும் அறிகிறார். மனிதர்கள் தங்களுக்குச் செம்மையாக தோன்றுகிற வழிகளில் சென்று வீணாய்போகிறார்கள். உங்களுடைய இருதயம் சரியாயிருக்கும்போது உங்களுடைய வழியும் சரியாய் இருக்கும். மனிதன் முகத்தைப் பார்ப்பான் ஆனால் கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்ற வசனத்தின்படி கர்த்தர் இருதங்களை ஆராய்ந்து அறிகிறார். உங்களுடைய வழியை தேவனுக்கு ஒப்புக்கொடுத்து உங்களுடைய இருதயத்தை ஸ்திரப்படுத்துங்கள். கர்த்தருடைய வருகை சமீபமாயிருக்கிறது.

### ஜெபியுங்கள்

- நமது மாத இதழின் வாசகர்களுக்காக...
- இம்மாத ஊழியங்களுக்காக...
- சுகவீனமானவர்களுக்காக...
- உலக சமாதானத்திற்காக...
- சுவிசேஷ ஊழியர்களுக்காக...
- கர்த்தருடைய சபைக்காக...
- விசுவாசிகள் இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவில் வளர்ச்சியடைய...





பெண்கள் பகுதி

## எல்லாம் புதிதாயின
## All things have become new

*-Glory Arjunan*



அன்பு சகோதரியே, எல்லாம் புதிதாயின! இவ்வசனத்தை அடிக்கடி வாசித்திருப்போம். சில வேளைகளில் பிரசங்கத்திலும் கேட்டிருப்போம். நாமும்கூட எல்லாம் புதிதாகவேண்டும், பழைய பாடுகள். பிரச்சனைகள், தோல்விகள், நோய்கள் எல்லாமே நம்மை விட்டு அகல வேண்டுமென விரும்புகிறோம். ஆனால் தேவன் நம்மிடம் எதிர்பார்க்கும் அந்த புதியவைகள் எவைகள் என நாம் அறிந்துகொள்வது இக்கடைசி காலத்திலுள்ள நமக்கு மிகவும் அவசியமென நினைக்கிறேன்.

ஆவியானவர் பவுலின் மூலம், **"..உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்"** (ரோம.12:2) என திருவுளம்பற்றுகிறார். ஆம், நம் மனம் மறுரூபமாக வேண்டும். மறுரூபம் என்றால் என்ன? ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு மாற்றமடைவது. அதாவது பழைய நிலையிலிருந்து புதியநிலைக்கு மாற்றமடைவது. அப்படியானால் மனதளவில் நம்முடைய நிலை என்ன என்பதை தேவனுடைய வார்த்தையின் துணை கொண்டு அறிந்துகொள்ள வேண்டும். ஏனென்றால் நம்முடைய உள்ளிந்திரியங்களை தேவன் ஒருவரே அறிவார். நம்முடைய இருதயம் செம்மையாக இருக்கிறதா? அல்லது திருக்குள்ளதாயிருக்கிறதா? என்பதையும் அவர் அறிவார். அவருடைய கண்களுக்குமுன் ஒன்றும் மறைவானதில்லை என வேதம் கூறுகிறது. அன்பு சகோதரியே, இன்றைய நாட்களில் எங்கும் மாய்மாலம் பெருகியுள்ளது. அநேகர் தங்கள் உதடுகளினால் இனிமையாகப் பேசுவர், ஆனால் தங்கள் உள்ளத்திலோ வஞ்சகம் அல்லது கபடு நிறைந்து காணப்படும். ஆனால் நாமோ மிகவும் ஞானமுள்ளவர்களாய் நடந்துகொள்ள வேண்டியது மிக அவசியமாயிருக்கிறது. கிறிஸ்துவுக்கு வெளியே அல்லது புறம்பே இருக்கிறவர்களுக்கு முன்பாக மிக ஞானமுள்ளவர்களாக நடக்கவேண்டும். வேதமும் அவ்வாறே கூறுகிறது "புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்" என (கொலோ. 4:5) போதிக்கிறது. ஒருவேளை நாமே, கிறிஸ்துவுக்கு வெளியே அல்லது புறம்பேயிருக்கிறவர்களைப் போல் மாய்மாலம் பண்ணிக்கொண்டு வாழ்வோமென்றால் முதலாவது நாம் நம்மை சரிசெய்து கொள்ள வேண்டும். நம்முடைய மனம் பலவிதமான பாவங்கள் நிறைந்து பழைய ஆதாமின் நிலையிலிருக்குமானால் நம் மனம் புதிதாக வேண்டியது அவசியம் "உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி," (எபேசி.4:23) என வேதம் கூறுகிறது. பழைய ஜென்ம சுபாவங்களாகிய கோபம், மேட்டிமை, பொய், அசுத்தம், புறங்கூறுதல், கோள்ச்சொல்லுதல், சுயநலம்,

**வேதகம கேள்விகள்**

வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்

ஆம் எனில் ☑ குறியிடவும்



**தற்சோதனை பகுதி - 17**

**17. நாம் எப்படி இரட்சிக்கப்படுகிறோம்?**

1. கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிடு ☐ வசன ஆதாரம் ----------------------------------------------------------------
2. தேவன் நம்மோடு பேசுவதன்மூலம் ☐ வசன ஆதாரம் -------- ----------------------------------------------------------------
3. மறுஜென்ம முழுக்கினால் இரட்சிப்பு ☐ வசன ஆதாரம் ------- ----------------------------------------------------------------
4. நமது நீதியின் கிரியைகளினால் நமக்கு இரட்சிப்பு ☐ வசன ஆதாரம் ----------------------------------------------------------------
5. விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெறவேண்டும் ☐ வசன ஆதாரம் ----------------------------------------------------------------
6. நாம் அவரை விசுவாசித்தால் போதும் ☐ வசன ஆதாரம்--------- ----------------------------------------------------------------
7. இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் சபையில் சேர்க்கிறார் ☐ வசன ஆதாரம்----------------------------------------------------------------
8. மனிதனாக பிறந்த அனைவரும் இரட்சிக்கப்படுவார்கள் ☐ வசன ஆதாரம் ----------------------------------------------------------------
9. உங்கள் விசுவாசத்தின் பலன் இரட்சிப்பு ☐ வசன ஆதாரம்--------- ----------------------------------------------------------------
10. இரட்சிப்பு நம் கையில் இருக்கிறது ☐ வசன ஆதாரம் -------- ----------------------------------------------------------------

**தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான்**
**1கொரிந்தியர்2:11**

**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதைக் கண்டுபிடித்து குறியிடுங்கள்**
**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**
**இப்பகுதியை கத்தரிப்பதோ அல்லது வெட்டியெடுப்பதோ குற்றம்.**
**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**




**JOIN OUR**
**WORLD EVANGELISM BIBLE SCHOOL**
**RIGHT NOW**
*Contact Us: 94435 58041*




# பழைய பாவ மனிதன் களையப்படுதல்

## Putting Off The Old Man of Sin

*-J.C.Choate*

## பாடம் -7 மது அருந்துதல் - Drinking

**- சென்ற மாத தொடர்ச்சி...**

அடுத்து என்னோடு கூட கலாத்தியர் 5:19-21க்கு திரும்புங்கள். இங்கே பவுல், "மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன; விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்" (கலா.5:19-21). இங்கு தேவனுடைய மனிதனை பட்டியலிடப்பட்டுள்ள பல கிரியைகளும் பழக்கவழக்கங்களும் ஊக்கமளித்து, அவைகளை அவன் மாம்சத்தின் கிரியைகள் என அழைக்கிறான். மாம்சத்தின் கிரியைகள் யாவை? அவைகள் எல்லாமே கெட்டகாரியங்கள் வேதனையை அளிப்பவைகள், அழிப்பவைகள், மற்றவர்களை வேதனைப்படுத்துபவைகள். எல்லா கெட்ட காரியங்களுக்கும் மத்தியில் குடிப்பழக்கம் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளதையும் கவனித்தீர்களா. அவை எது? அவை போதை தரும் மது பானங்கள் குடிப்பதினால் வருகின்ற சில காரியங்கள். இப்போது இவற்றினால் இழுக்கப்பட்டு மாம்சத்தின் கிரியைகளைச் செய்ய விருப்பமுடையவர்களாயிருக்கிறீர்களா? நீங்கள் மதுபானங்களை அருந்துவீர்களானால், பின்பு நீங்கள் ஏற்கனவே இதில் சிக்கிக் கொண்டீர்கள்.

தொடர்ந்து நாம் வாசிக்கிறோம், "துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினால் நிறைந்து" (எபே.5:18). மதுபானம் அருந்துவதைத் தடைசெய்ய வேண்டுமென அநேக கோட்பாடுகள் வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. பவுல், "பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்" (1தெச.5:22) என எழுதியுள்ளார். அவர் நமது சரீரங்களைப் "...பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று" (ரோம.12:1) சொன்னார். 1கொரிந்தியர் 3:16,17 மற்றும் 1கொரிந்தியர் 6:18-20 அவர் நம்முடைய சரீரங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறது என்றும் ஆனபடியினால் நாம் அவைகளை பாவத்தினால் அசுசிப்படுத்தக் கூடாது என்றும் அல்லது சரீரத்தின் ஆலயங்களை அழித்துப் போடவிரும்புகிறவர்களாக அதனுள் எந்த அசுத்தத்தையும் வைத்திருக்கக் கூடாதென்றும் சொல்கிறார்.

எப்போதாவது நீங்கள் மதுபானம் அருந்துகிறவர்களை, அப்பேர்பட்ட மக்களை, மேலும் அவர்கள் மதுஅருந்த எங்கே செல்கிறார்கள் என்பதை

கவனித்திருக்கிறீர்களா? மிகவும் கெட்ட மனிதர்களே மதுஅருந்துகின்றனர். கொலைசெய்பவர்கள், பொய்யர், திருடர், ஒழுக்கங்கெட்டவர்கள், இன்னும் இதுபோன்ற பல கெட்ட செயல் செய்பவர்கள். ஆனால் நீங்கள் கண்டிப்பாக நாங்கள் இவ்வகை பிரிவைச் சேர்ந்தவர்களல்ல எனக் கூறவேண்டும். நீங்கள் இப்போது இப்படியில்லையென்றால், நீங்கள் அங்கே இருப்பதற்கு முன் இதை விட்டு விட எவ்வளவு நாட்கள் எடுக்கும்? பாருக்குப்போய், இரவு விடுதிக்குச் சென்று, இன்னும் கெட்ட காரியங்கள் எங்கெல்லாம் நடந்துகொண்டேயிருக்கிறதோ அங்கெல்லாம் சென்று மேலும் அங்கே எப்போதும் திடமான சட்டரீதியாகவோ அல்லது சட்டத்தைமீறியோ கிடைக்கும் இடத்திற்குச் செல்வீர்கள்.

திடமான மதுபானத்தை விளம்பரப்படுத்துபவர்கள் எப்போதும் புத்திக்கூர்மையுள்ளவர் பயன்படுத்தும் மதுவகை போலவும், செல்வந்தர்கள், சினிமா மக்கள், பிரபல்யமான விளையாட்டு வீரர்களின் உருவங்களையும் மற்றும் இதுபோன்ற பலவற்றையும் போல படங்களை சித்தரிப்பார்கள் அவர்கள் நீங்கள் முக்கியஸ்தர்கள் என நம்பசெய்யவும் அல்லது அவர்களைப் போல நீங்களும் இருக்க விரும்புவீர்களானால் நீங்களும் மது அருந்துவீர்கள் எனவும் இப்படிச்செய்கிறார்கள். ஆனால் அவர்கள் உங்களுக்கு குடி மயக்கத்தின் சந்தோஷத்திலிருக்கும் எல்லா படங்களையும் காண்பிக்க மாட்டார்கள். அவர்கள் தங்களது வாழ்வை வீணாக்கி தங்களது உடல் நலத்தை தங்கள் குடும்பங்கள் மற்றும் எல்லாவற்றையும் திடமான மதுபழக்கத்தினால் கெடுத்துக்கொள்ளுகிறவர் களாயிருக்கிறார்கள். இல்லை, அவர்கள் எல்லா பட விளம்பரங்களையும் காண்பிப்பதில்லை, ஆனால் கண்டிப்பாக நீங்கள் என்ன நடக்கிறது எப்போது ஒருவன் மது அருந்த துவங்குகிறான் என்பதையும் கண்டிருக்கிறீர்கள்.

நீங்கள் புத்திசாலிகளாயிருந்தால், என்னுடைய நண்பரே, நீங்கள் முழுவதுமாக திடமான மது பானத்தை தவிர்த்து விடுவீர்கள். முதலாவது மதுபானத்தை குடிக்காதீர்கள். உங்கள் வீட்டிற்குள் நுழைய அனுமதிக்காதீர்கள். உங்கள் குடும்பத்தின் முன் ஒரு கெட்ட மாதிரியாக இருக்காதீர்கள். உங்களை மதுபானம் அழித்துவிட அனுமதிக்காதீர்கள். உங்கள் நண்பர்கள் உங்களை மது அருந்தும்படி தூண்டுவதற்கு அனுமதிக்காதீர்கள். அவர்கள் மதுஅருந்தினால் அவர்கள் நீங்களும் மதுஅருந்தும்படி விரும்புவார்கள் ஆகவே நீங்கள் அவர்களிடம் குற்றம் கண்டுபிடிக்க இயலாது.

ஒரு குடிப்பழக்கமுடையவன் இவ்வுலகிலும் மற்றும் வரவிருக்கும் உலகிலும் காப்பாற்றப்பட முடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். நிச்சயமாக மது அருந்துகிற ஒருவன் தன்னுடைய மது அருந்தும் பழக்கத்திற்காக மனந்திரும்ப அல்லது அதை விட்டு விலகி, கிறிஸ்துவுக்குள் தன்னுடைய விசுவாசத்தை அறிக்கையிட்டு, தன்னுடைய பாவங்களுக்காக ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டு வர இயலும் அதன் பிறகு கர்த்தர் அவனை இரட்சித்துக் கொள்வார். ஆனால் இது திடமான மது அருந்துவது போன்ற கெட்ட பழக்க வழக்கங்களிலிருந்து விலகி தேவனுக்கு கீழ்ப்படியும் போதுதான் அவன் இரட்சிக்கப்பட முடியும். நீங்கள்



## பொது அறிவு சோதனை

1. முதன்முதலாகக் கண்டுபிடிக்கப்பட்ட ' ஆன்டிபயாடிக்' மருந்து எது?
   அ) டயமைக்ரான் ஆ) எரித்ரோசின் இ) பென்சிலின்
2. 'டச் மார்க்' நாணயம் எந்த நாட்டில் பயன்படுத்தப்படுகிறது?
   அ) இத்தாலி ஆ) ஜெர்மனி இ) ஹாலந்து
3. இந்தியாவில் முதன்முதலில் சட்டப்பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்பட்ட இடம் எது?
   அ) சென்னை ஆ) மும்மை இ) கோல்கட்டா
4. உலக மக்கள் தொகை தினம் கொண்டாடப்படும் நாள்?
   அ) மார்ச் 21 ஆ) ஜூன் 5 இ) ஜூலை 11
5. இந்திய தொழில் நிதிக் கழகம் உருவாக்கப்பட்ட ஆண்டு?
   அ) 1936 ஆ) 1948 இ) 1950

**விடைகள்:**
1. இ 2. ஆ 3. அ 4. இ 5. ஆ

*நான் தங்களது பத்திரிக்கையை முதன் முறையாக வாசிக்க நேரிட்டது. மிகவும் ஆழமான சத்தியத்தை எழுதியிருக்கிறீர்கள். சந்தேகமேயில்லை. ஆனால் ஒரு சின்ன சந்தேகம் ஏப்ரல் 19 பத்திரிக்கை பெண்கள் பகுதியில் அநேக ஸ்திரீகளைக் குறித்து மிகவும் நேர்த்தியாக உயர்வாக கனப்படுத்தும் விதமாக எழுதப்பட்டுள்ளது. குறிப்பாக ஊழியக்காரியான பெபெயாள் (ரோம. 16:12), மரியாள் (ரோம. 16:12), ஸியோதியாள், சிந்திகேயாள், கிலேமெந்து, பிரிஸ்கில்லாள் மகதலமரியாள், யோவன்னா, சூசன்னா இவர்களெல்லாம் கனத்துக்குரிய பாத்திரமே. கன்னிகையை (மரியாளைப் பற்றி) ஒரு வார்த்தை கூட எழுதாதற்கு உண்மையான காரணம் என்ன? – அருண்*

**பதில்:** மேற்கண்ட ஸ்திரீகள் இயேசுவுக்கு ஊழியம் செய்தவர்கள். மரியாளோ இயேசுவின் பிறப்பிற்காக ஸ்திரீகளுக்குள்ளே தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரம். அவளைப் பற்றிய ஒரு சிறப்புக்கட்டுரை வெளிவரும். நன்றி

**வாசகர் கடிதம்**

## தெரிந்துகொள்வோம்

*-K.R.K.Ravi Asir*

- 1826ல் முதன் முதலாக மூக்குக் கண்ணாடி இத்தாலியில் கண்டுபிடிக்கப்பட்டது.
- அச்சுத்தட்டில் கதையைப் படைத்த முதல் எழுத்தாளர் மார்க்டைவன். மிசிசிபி நதியில் வாழ்க்கை எனும் நூலை 1883 ல் அச்சுத்தட்டு மூலமாகவே எழுதி முடித்தார்.
- வளையத்தில் சாவி மாட்டும் வழக்கத்தை முதன் முதலில் கையாண்டவர்கள் ரோம் நாட்டினர்.
- மிக்கிமௌஸ் கார்ட்டூன் படங்களில் மிக்கிக்காக முதலில் குரல் கொடுத்தவர் அதை உருவாக்கிய வால்ட் டிஸ்னிதான்.
- ஜார்ஜ் பிரட்ஷா என்ற ஆங்கிலேயர்தான் முதன் முதலில் ரயில்களின் கால அட்டவணையை தயாரித்து வெளியிட்டார்.

பிரபலமாயிருக்கவில்லை; அவர்கள் கர்த்தர் போதித்தவற்றை பிரசங்கித்ததினால் அவர்கள் வெறுக்கப்பட்டார்கள் மேலும் துன்புறுத்தப்பட்டார்கள்; பல வழிகள் இல்லை; ஏற்றுக்கொள்ளப்படதக்க மதங்கள் இல்லை; பல சபைகள் இல்லை; இரட்சிக்கப்படுவதற்குப் பல வழிகள் இல்லை; தேவனை ஆராதிப்பதற்குப் பல வழிகள் இல்லை. இயேசு போதித்தார் மேலும் கிறிஸ்தவர்கள் போதித்தார்கள் “ஒரே ஒரு வழியை” மட்டுமே.

இயேசு கூறினார்: “நான் என் சபையைக் கட்டுவேன்... என்று (மத்.16:18). பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலின் மூலம் “...கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றுமில்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்” (எபே.5:25-27) என்று பவுல் எழுதினார்.

இயேசு, தம்முடைய ஜனமாகிய, தம்முடைய ராஜ்யமாகிய, தம்முடைய மணவாட்டியாகிய தம்முடைய சபைக்குத் திரும்பவும் வருவதாக வாக்களித்தார் (வெளி.22:12, யோவா.14:3, மத்.25:31-46). நீங்களும் நானும் “அந்த மார்க்கத்தில் இருப்போமா?”

## தேவ அன்பு - The Love of God



மனிதனுடைய குற்றங்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற தேவநீதியை தவிர மனிதனுடன், தேவன் வைத்திருக்கும், எல்லா உறவு முறையிலும், அவருடைய அன்பை பெற பாத்திரமில்லாதவனுக்கும் தேவன் சந்தோஷத்தையும், வாழ்வையும் இரக்கத்தையும், அளிக்கிறார்.

வேதாகமம் ஒரு நீண்ட காதல் (அன்பு) கதை. தேவனுடைய அன்பு கடிதத்தில், தம் உள்ளத்தை திறந்து நம்மீது கொண்டுள்ள மிகச்சிறந்த பாசத்தை வெளிப்படுத்துகிறார். அவர் அன்பு நமக்கு எவைகளை எல்லாம் செய்ய வைத்தது, அது எப்படிப்பட்ட அன்பு என்பதை இந்த புத்தகத்தின் பக்கங்களை வாசிக்கும் போது அவரிடத்திலிருந்து கற்றுக்கொள்கிறோம். கிறிஸ்தவனுடைய இருதயத்திற்கும் அன்பிற்கும், மற்ற தேவர்கள் என்று சொல்லப்படுபவர்களைப் பின்பற்றுவோர் இருதயத்தில் இருக்கும் அன்புக்கும் உள்ள வித்தியாசமே இதுதான். கிறிஸ்துவின் அன்பு செயல்படுகின்ற அன்பு. தன்னைக் காட்டிலும் மேலாக மற்றவனிடத்தில் அக்கரை காட்ட வேண்டும் என்பதை வலியுறுத்தும் அன்பு.

-Betty



கேள்விப்பட்டிருக்கிற சத்தியத்தையும் விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் ஒருபோதும் மது அருந்தவே மாட்டார்கள் என்பதையும் குறித்து கவலையற்றவர் களாயிருந்தாலும் கூட நீங்கள் இரட்சிக்கப்பட முடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். நிச்சயமாக நீங்கள் குடிப்பழக்கமுள்ளவர் என்று அழைக்கப்பட விரும்ப மாட்டீர்கள். ஆனபடியினால், மது அருந்தாதீர்கள், அல்லது நீங்கள் மது அருந்தினால், அந்த அசுத்தமான, ஊதாரித்தனமான, அழிவுள்ள பழக்கத்திலிருந்து வெளி வர தீர்மானியுங்கள். **மது அருந்தும் பழக்கம் நற்பழக்கமல்ல, ஆனால் மது அருந்தாமலிருப்பது நற்பழக்கமாகும்.**

நீங்கள் ஒரு கிறிஸ்தவராக மாறிவிடுவீர்கள் என நான் நம்புகிறேன். மேலும் கிறிஸ்து இந்த கெட்ட பழக்கத்தை மேற்கொள்ளவும் அல்லது இதிலிருந்து விலகியிருக்கவும் உதவிசெய்வாராக!

இக்காரியங்களில் நாங்கள் உங்களுக்கு உதவி செய்ய முடியுமானால், அதிகமாக புத்தகங்கள் அல்லது உங்களுடைய கேள்விகளுக்கு பதில்களை அனுப்பிவைக்கிறோம். தயவு செய்து எங்களுக்கு எழுதுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

## உங்கள் சிந்தனைக்கு!



**நாம் நியாயந்தீர்க்கப்படாதிருக்க செய்யவேண்டியது என்ன?**

நியாயத்தீர்ப்பு என்பது கர்த்தருடைய கரத்தில் இருக்கிறது. நாமெல்லாரும் ஒரு நாளில் நியாயத்தீர்ப்புக்கு முன்பாக நிறுத்தப்படுவோம். கர்த்தர் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே நம்மை நியாயந்தீர்ப்பார்.

பவுல் சொல்கிறார்; “நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்” என்கிறார் (1கொரி.11:31). நாம் எப்படி ஜீவித்துக்கொண்டிருக்கிறோம்? நம்மிடத்தில் ஆவிக்குரிய கனிகள் காணப்படுகிறதா? வேதவசனத்தின்படி வாழ்ந்துகொண்டிருக்கிறோமா? போன்ற கேள்விகளை நம்மில் எழுப்பி அதற்கேற்றார்போல நம்மை மாற்றியமைத்துக்கொண்டு வாழ்வோமேயானால் நியாயத்தீர்ப்புக்கு தப்புவிக்கப்படுவோம்.

ஏனெனில் “சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்” என்கிறார் பவுல் (2கொரி.5:10). இந்த போதனை நியாயத்தீர்ப்புக்கு முன்பாக நாமனைவரும் நிற்போம் என்பதை உறுதிப்படுத்துகிறது. இதற்கு தப்பிக்கொள்பவன் ஒருவனும் இல்லை.

ஆகையால் நம்மை நாம் முதலாவது நிதானித்து அறிந்து மற்றவர்களைக் குற்றப்படுத்தாது, நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற தாலந்துகளைப் பெருக்கிக் காட்டி கர்த்தருடைய சமூகத்தில் நற்பெயர்பெற பிரயாசப்படுவோம். நீங்கள் நியாயந்தீர்க்கப்படாதிருக்க உங்களை முதலாவது சோதித்து அறியுங்கள்.

# எருசலேம்

-K.R.K.Ravi Asir



சுமார் கி.மு 444-ம் ஆண்டில் நெகேமியாவின் தலைமையின் கீழ் எருசலேம் திரும்ப கட்டி முடிக்கப்பட்டது. கிரேக்க ராஜ்யத்தின் காலத்தில் மகா அலெக்ஸாண்டரின் அதிகாரத்தின் கீழ் எருசலேம் இருந்தது. அவனுக்கு பின் அவனுடைய தளபதியாகிய டாலமி என்பவன் எருசலேமை ஆட்சிசெய்தான்.

கி.மு.203-ம் ஆண்டில் சீரியாவின் தளபதியாகிய அந்தியோகஸ் எருசலேமை தன் ஆட்சிக்குட்படுத்தினான். அவனுடைய குமாரனாகிய அந்தியோகஸ் எபிபேனஸ் என்பவனுடைய காலத்தில் யூதர்கள் துன்பப்படுத்தப்பட்டனர். மக்கபேயர் என்னும் ஆசாரிய பரம்பரையினர் யூதர்களின் சுதந்தரத்திற்காக யுத்தம் செய்து எருசலேமை கைப்பற்றினர். கி.மு 63-ல் பாம்பே என்ற ரோம சக்ரவர்த்தி எருசலேமை ரோம சாம்ராஜ்யத்தின் ஆளுகையின் கீழ் கொண்டுவந்தான். கி.பி 70-ம் ஆண்டில் தீத்து என்னும் ரோமராயன் எருசலேமை தீக்கிரையாக்கினான்.

எருசலேமில் சபை (கர்த்தருடைய ஆலயம், கிறிஸ்துவின் சபை, பரலோகராஜ்யம், தேவனுடைய ராஜ்யம்) ஸ்தாபிக்கப்படும் என்று பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் தீர்க்கதரிசனமாக முன்னுரைக்கப்பட்டிருந்தது (ஏசாயா2:2-4; தானி.2;44; ஏசாயா 11:1-4; லூக்கா24:46-48; அப்.1:4-8). தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படியே சபை எருசலேமில் துவக்கப்பட்டது. சபை ஸ்தாபிக்கப்பட்ட ஆண்டு கி.பி.33 ஆகும் (அப்.2:1-2; 38,41,47) பரலோகராஜ்யமாகிய கிறிஸ்துவின் சபைக்கு கிறிஸ்து தலையாயிருக்கிறார் (எபே.1:23); 5:23; கொலோ.1:18). நியாயப்பிரமாணத்தை இயேசு கிறிஸ்து சிலுவையிலே நிறைவேற்றி முடித்தபின்னும் (கொலோ.2:14-15; எபி.8:13) பலர் நியாயப்பிரமாணத்தை பின்பற்றுகிறவர்களாயிருந்தார்கள் நியாயப்பிரமாணம் கோபாக்கினையை உண்டாக்குகிறது (ரோம.4:15) என்று புதியஏற்பாடு நமக்குப் போதிக்கிறது.

யூதர்கள் எருசலேமை குறித்தும், அதன் தேவாலயத்தைக்குறித்தும் அதிகமாக மேன்மை பாராட்டினார்கள். எனவே தான் கர்த்தர் எருசலேம் தேவாலயத்தின் கட்டடங்களைக் குறித்து; "ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுபோகும்" என்று தீர்க்கதரிசனமாக உரைத்தார் (மத்.24:1-2). இந்த தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக கி.பி.70-ல் எருசலேம் நகரம் அழிக்கப்பட்டது ஆலய கட்டுமான கற்களுக்கு இடையே பொன்னை வைத்து சாந்து பூசியிருந்ததாக செய்தி பரவியது. இந்த காரணத்தினாலேயே சத்துருக்கள் எருசலேம் தேவாலயத்தை ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு இடித்துப்போட்டார்கள்.

கி.பி.70-கி.பி.637-ம் ஆண்டு வரை எருசலேம் ரோமசாம்ராஜ்யத்தின் கீழ் இருந்தபோதிலும், யூதர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் எருசலேம் நகரம் மிகமுக்கியமான ஸ்தலமாக இருந்தது. இந்நகரம் கி.பி.637முதல் 1517 வரை துருக்கியர்களுடைய ஆளுகையின் கீழ் இருந்தது. இச்சமயத்தில் கிறிஸ்தவர்களுக்கும் பெரும் உபத்திரவம் ஏற்பட்டது. அவர்கள் தேவாலயம் இருந்த இடத்தில் மசூதிகளை கட்டினார்கள். கி.பி.1517 முதல் 20-ம் நூற்றாண்டில் ஏற்பட்ட முதல் உலகப்போர்வரையில் துருக்கியர்கள் முஸ்லீம் மதத்தை வெகுவாய் பரப்பியபடியால் எருசலேம் பெயர் அற்றுப்போயிற்று இந்த நகரம் பின்பு பிரிட்டிஷ் நாட்டு ஆளுகையின் கீழ் வந்தது. இரண்டாம் உலப்போருக்குப் பின் 1948-ம் ஆண்டு ஜுன்மாதத்தில் மறுபடியும் எருசலேம் யூதர்கள் வசம் ஒப்புவிக்கப்பட்டது. ஆயினும் அதன் ஒரு பகுதி துருக்கியர்கள் வசம் இருந்தது. அதற்கு பின் ஏற்பட்ட யுத்தத்தில் (6 நாள் யுத்தம்) எருசலேம் நகரம் முற்றிலும் யூதர்கள் வசம் ஒப்புவிக்கப்பட்டது.



- ❑ எத்தனை சத்தியங்கள் உள்ளன? ஒன்று
- ❑ எத்தனை இரட்சகர்கள் உள்ளனர்? ஒன்று
- ❑ எத்தனை வாசல்கள் உள்ளன? ஒன்று
- ❑ எத்தனை மேய்ப்பர்கள் உள்ளனர்? ஒன்று
- ❑ எத்தனை மந்தைகள் உள்ளன? ஒன்று
- ❑ எத்தனை வழிகள் ஜீவனுக்கென்று உள்ளன? ஒன்று

நீங்கள் இதைப்பற்றி சிந்தித்திருக்கிறீர்களா?

புதிய ஏற்பாட்டில் ஒரு சபை அல்லது ஜனக்கூட்டம் விசாலமானதும் குறுகலானதுமான வழியாக அடையாளப் படுத்தப்படுகிறது. என்னோடு வாசியுங்கள்.

❑ சவுல் அதிகாரமுள்ளவர்களின் நிருபத்தைக் கேட்டு வாங்கினான். "இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும் ஸ்திரீகளையாகிலும் தான் கண்டுபிடித்தால், அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டுவரும்படி..." (அப்.9:2)

எனவே, துன்புறுத்தப்பட்டவர்களாயிருந்த இந்த மார்க்கத்தார், நிருபத்தில் எழுதப்பட்டவர்களாகவும், அடையாளங்காணக்கூடியவர்களாகவும் இருந்தார்கள்.

❑ "அக்காலத்திலே இந்த மார்க்கத்தைக் குறித்த பெரிய கலகம் உண்டாயிற்று" (அப்.19:23). எபேசுவில் தேவனுடைய ராஜ்யத்துக்கடுத்தவைகளைக் குறித்துச் சம்பாஷணைபண்ணி, புத்திசொல்லிக்கொண்டு வந்தபோது சிலர் பவுலுக்குச் செவி கொடுத்தார்கள், ஆனால் சிலர் கடினப்பட்டு அவிசுவாசிகளாகி, அவர்கள் ".... கூட்டத்திற்கு முன்பாக இந்த மார்க்கத்தை நிந்தித்தார்கள்" (அப்.19:8,9).

எனவே, ஜனங்கள் தேவனுடைய ராஜ்யத்துக்கடுத்தவைகளைக் குறித்து அவர்கள் பிரசங்கித்ததை புறக்கணித்து, அந்த மார்க்கத்தை நிந்தித்தார்கள். நீண்ட நாட்களாக வர காத்திருந்த ராஜ்யம் அந்த மார்க்கமாகிய, சபையாக இருந்தது.

❑ பவுல், "உம்மிடத்தில் ஒன்றை ஒத்துக்கொள்ளுகிறேன்; அதென்னவென்றால், இவர்கள் மதபேதம் என்று சொல்லுகிற மார்க்கத்தின்படியே எங்கள் முன்னோர்களின் தேவனுக்கு ஆராதனை செய்து..." (அப்.24:14) என்றான்.

எனவே, பவுல் இந்த மார்க்கத்தின் தனிப்பட்ட விதத்திலும், அடையாளங்காணத்தக்கவிதத்திலும் தேவனை ஆராதித்த மக்கள் சபையின் ஒரு அங்கமாக இருந்தான்.

நீங்கள் இதைப்பற்றி சிந்தித்திருக்கிறீர்களா?

இயேசு, ஜீவனுக்கு நேராய் வழி நடத்துகிற ஒரே ஒரு வழியையும், அவரே அந்த வழி என்றும் கூறினார். அந்த மார்க்கத்தைப் பின்பற்றின ஆதிக்கிறிஸ்தவர்கள் பிரபலமாயிருக்கவில்லை; அவர்கள் பிரசங்கித்த கோட்பாடும்

தெரிந்து கொள்ளுகிறோமா? பெரும்பான்மையோருடைய பாதை நம்மை கவர்ந்திருக்கிறதா? நம்முடைய பெற்றோர்களின் தெரிந்தெடுத்தல் நம்முடையதாக இருக்கின்றதா? மனிதரால் ஆரம்பிக்கப்பட்ட மதங்களை நாம் பின்பற்றுகிறோமா? நம்மருகிலுள்ள பிரிவினை சபை நம்மை திருப்திப்படுத்துகிறதா? எந்த ஒரு சமயக்கோட்பாடுமின்றி நம்முடைய சுயநன்மைகளில் நாம் போதுமான அளவு நல்லவர்களாக இருக்கிறோம் என நாம் தீர்மானிக்கிறோமா?

இதைப்பற்றி சிந்தித்திருக்கிறீர்களா?

வேதாகமம் கூறுகிறது: ''மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்'' (நீதி.14:12).

''கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடத்துகிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்'' (எரே.10:23).

இயேசு கூறினார்: ''நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்'' (யோவா.14:6).

அவர் மேலும் விளக்கினார், ''நானே வாசல் என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான்...'' (யோவா.10:9).

இயேசு எதற்கு வாசலாக இருக்கிறார்? அவர் பதிலளிக்கிறார்: ''நானே ஆடுகளுக்கு வாசல்... நானே நல்ல மேய்ப்பன் பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறது போலவும் நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்; ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன். இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டு வர வேண்டும். அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்'' (யோவா.10:7,14-16).

மனிதர் பல வழிகள் உண்டென்றும், அவைகள் தாங்கள் விரும்பியவற்றை தெரிந்தெடுக்க எளிதாக இருக்கின்றது என்றும் தங்களுக்குள்ளாக சொல்லக்கூடும். ஆனால் தேவனுடைய குமாரனும் நமது இரட்சகருமாயிருக்கிற இயேசு இரண்டு வழிகள் மட்டுமே உண்டென்று கூறுகிறார். மனிதர் ஏற்படுத்தியிருக்கிற நூற்றுக்கணக்கானவைகள் அல்லது ஆயிரக்கணக்கானவைகள் அல்ல இரண்டு மட்டுமே. அவைகள்...

''இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டு பிடிக்கிறவர்கள் சிலர்'' (மத்.7:13,14).

நீங்கள் இதைப்பற்றி சிந்தித்திருக்கிறீர்களா?



**நமது நண்பர்களுக்கு சுவிசேஷம் அறிவித்தல்**
Evangelizing Our Friends



**எஞ்சியுள்ள ஆவிக்குரியவை உங்களுடைய நண்பர்களுக்கு உதவுகிறது**
Remaining Spiritual Helps Your Friends
**பாடம் -11**
-TVOTI

- சென்ற மாத இதழின் தொடர்ச்சி

தேவனுடைய வார்த்தைக்குச் செவி சாய்த்து விசுவாசத்துடன் அவரை நோக்கி ஜெபிப்பதன் மூலம் தேவனோடு ஒரு உறுதியாக உறவினைக் கொண்டுவந்து இதனைச் செய்ய இது நமக்கு உதவுகிறது. அநுதினமும் இம்மனநிலைகளை நாம் செயல்படுத்தும்போது மாம்ச இச்சைகள் வளர்ந்து படர்வதற்கான அறைகள் காணப்படாமல் அவைகளைக் கட்டுப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம். அதன்பின் இவைகளைப் பயிற்சி செய்யும்போது மற்றவர்களோடுள்ள உறவினை நன்றாக கட்டி எழுப்புவோம். இதுவே ஆவிக்குரிய வாழ்விற்கான உண்மையான திறவுகோல்.

**எவ்வாறு இதை நாம் பிரயோகிக்கிறோம்?**

நம் வாழ்வில் இக்கோட்பாடுகளைப் பிரயோகிக்க நாம் ஒழுங்காக வேதம் வாசிக்கவேண்டும். சிலவேளைகள் வேதாகமமானது பலநூற்றாண்டுகளுக்கு முன் நடந்த வரலாற்று சம்பவங்களை உள்ளடக்கியது, எனவே அவர்களுடைய வாழ்க்கையில் உண்மையான மதிப்பினைக் கொண்டிருக்கவில்லை என ஜனங்கள் உறுதியாக நினைப்பர். நீங்கள் நோவாவின் வரலாற்றினை நூறு முறை கேள்விப்பட்டு "இனிமேல் இன்னொரு வெள்ளம் ஏற்படாது, நான் ஓர் பேழையை கட்ட வேண்டியதில்லை, மேலும் இப்பேர்பட்ட எல்லா வரலாற்றுப் பாடங்களைக் குறித்து தொடர்ந்து கேள்விப்படுவதினால் என்ன பயன் உண்டு?. என நினைக்கலாம்.

ஆனால் வேதாகமம் வரலாற்று புத்தகத்தைக் காட்டிலும் மிகையளவிலுள்ளது. வேதாகமத்திலிருந்து கடந்த காலத்தில் கீழ்ப்படிந்த மற்றும் கீழ்ப்படியாத மக்களோடு தேவன் எவ்வாறு செயல்பட்டார் என்பதைக் கற்றுக்கொள்ளலாம். மக்களுடைய வாழ்வில் அவருடைய இடைபடுதலையும், கழகம் வடிவமைக்கப்பட்ட நிகழ்வுகளையும் நாம் காண்கிறோம். வேதாகமத்தை தேவனுடைய வார்த்தையாக மதிக்க வேண்டும் மேலும் அவைகளின் அறிவுரைகள், எச்சரிப்புகள் மற்றும் வாக்குத்தத்தங்களுக்குச் செவிசாய்ப்பதன் மூலம் தேவன் நம்மோடு பேச அனுமதிக்கிறவர்களாய் இருக்கிறோம். வேதம் கூறுகிறதைக் கற்று நம் வாழ்வின் கட்டமைப்பில் அவற்றிக்குக் கீழ்ப்படிவதே நமது இலக்காக இருக்கவேண்டும். வேதாகமத்தை பக்தியுடன் வாசிப்பது நல்லது, ஆனால், அதிலிருந்து சிலவற்றை பெற்றுக்கொள்ள, வேதாகமத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் தேவன் உங்களிடத்தில் நேரடியாக பேசுவதாகக் கருதி நாம் ஜாக்கிரதையாக அதைப்படிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். 2தீமோ.2:15, **"நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக**

**நிறுத்தும்படி ஜாக்கிரரையாயிரு".**

**வாழ்க்கையில் பிரச்சனை**களுக்குத் தீர்வு காண விரும்பினால் நாம் வேதாகமத்திற்குத் திரும்ப வேண்டும். இது தேவனையும் அவருடைய வசனத்தையும் உண்மையாகவே முழு இருதயத்தோடு விசுவாசித்து அவருடைய வழிகாட்டுக் குறிப்புகளைப் பின்பற்றுவதால் நம்முடைய வாழ்வில் உண்மையான மாற்றங்களை உருவாக்குமென நாம் புரிந்துகொள்கிறோம். நாம் தேவனுடைய வார்த்தையைப் படித்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

நம்முடைய தினசரி வாழ்க்கையில் இக்கோட்பாடுகளை அப்பியாசப்படுத்துவதற்கு ஜெபத்தில் தேவனோடு அடிக்கடி பேசுவதே சிறந்த வழி என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. உங்கள் இருதயத்திலும் உங்கள் மனதிலும் இருப்பதை அவரிடம் கூறி அதன்பின்பு அவற்றை அவருடைய கைகளில் விட்டு விடுங்கள். இதுவே தேவன் நம்மிடத்தில் இருக்க விரும்புகிற சமாதானத்தைப் பெற்றிருக்கக்கூடிய மாபெரும் வழியாகும். நாம் உண்மையாகவே நம்முடைய பாரத்தையெல்லாம் அவர் மேல் வைத்துவிடலாம் ஏனென்றால் அவர் நம்மை ஆதரிப்பார் (1பேது.5:17). தேவன் நம்முடைய வழியில் அனுப்பியிருக்கிற ஆசீர்வாதங்களுக்காக அவருக்கு நாம் நன்றி செலுத்துவதும் மிக முக்கியமானதாகும். பவுல், **"தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது. இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்; நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள்"** (கொலோ.3:15). என்றெழுதினார்.

நாம் நம்முடைய ஆசீர்வாதங்களை எண்ணும் போதும் நாம் கொண்டிருக்கிறவற்றிற்காக நன்றியுடையவர்களாய் இருக்கும் போதும் நமக்கில்லாதவற்றினைக் குறித்து நமது மனம் சிந்திக்காமல் நம்முடைய வாழக்கையிலிருந்து வெறுப்பை நீக்கி ஏதுக்களை உருவாக்குகிறது. ஒரு மனநிறைவுள்ள மனிதன் தான் ஒரு ஆவிக்குரிய மனிதன். எபிரெயர் 13:5ல் நாம், **"நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே"** என்று வாசிக்கிறோம்.

மாம்ச இச்சைகள் பலமிக்கதாகவும் நம்மை மேற்கொள்ளும் ஆற்றல் உடையதாகவும் இருக்கிறது. ஆவிக்குரியவர்களாயிருக்கையில், இப்பேர்ப்பட்ட இச்சைகளை நாம் மேற்கொள்ள முடியும் அத்தோடுகூட நம்முடைய நண்பர்கள் இப்பேர்ப்பட்ட இச்சைகளில் சிக்கிக்கொள்ளாமலிருக்க அவர்களுக்கு உதவி செய்பவர்களாகவும் இருக்க முடியும். இவ்வழியில் வாழ்கின்ற போது வருகின்ற அற்புதமான பலன்களையும் நம்முடைய ஆவிக்குரிய வாழ்வினையும் அவர்கள் பார்க்கும் போது, அவர்கள் தேவனையும் கிறிஸ்துவையும் பற்றி அதிகமதிகமாய் அறிந்து கொள்ள ஆர்வமிக்கவர்களாவார்கள், நாமும் அவர்களுக்கு ஒரு ஆசீர்வாதமாக இருக்க முடியும்.

**தொடர்புடைய இவ்வேத வாக்கியங்களைப் படித்து விவாதியுங்கள்:**

மத்தேயு 6:9,23:34-40 யோவான் 4:23,6:63 ரோமர் 10:17 கலாத்தியர் 5:16, 22-23 பிலிப்பியர் 4:6-7 கொலோசெயர் 3:15,17 2தீமோத்தேயு 2:15 எபிரெயர் 13:5 1பேதுரு 5:7.





## நீங்கள் இதைப்பற்றி சிந்தித்திருக்கிறீர்களா?

## Have You Thought About This?

-Betty

ஜனங்கள், நம்முடைய அடிப்படை நோக்கம் கிறிஸ்துவாகவும், அவர் நமக்கென்று உருவாக்கின பெரிய தியாகமாகவும் இருக்கவேண்டும் எனக்கூறிக்கொண்டு சபையை மட்டுப்படுத்துகின்றனர்.

ஆனால், உண்மையில் தேவனுடைய முக்கிய நோக்கம் சபையே! வரலாற்றின் தொடர் ஓட்டத்தில், அவருடைய இலக்கு கிறிஸ்துவினுடைய மரணம் அல்ல ஆனால் அந்த மரணம் நிறைவேற்றிய மனிதருடைய ஆத்துமாக்களை தம்மிடத்திற்கு மீட்டுக் கொண்டதேயாம். சபையைப் பற்றிய விளக்கம் இது: மாம்ச சரீரம் தேவனிடத்திற்கு மீட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் கிறிஸ்து தாமே சபையை போஷித்தார். அவருடைய மரணமே ஆயுதம். தேவன் நாடிய இலக்கு!

இல்லை, ஜீவனைக் கொடுக்கும்படி மரித்த ஒருவரை நாம் மட்டுப்படுத்தக்கூடாது. ஆனால் நாம் தேவனுக்கும் தமக்கென்று சபையை சம்பாதிக்கும்படிக்கு மேலான தியாகத்தைச் செய்த கர்த்தருக்கும் அதிக விலையேறபெற்ற கிரயத்தை மட்டுப்படுத்திய அந்த குற்ற உணர்வுடையவர்களாய் இல்லாமல் இருப்போமாக!

நீங்கள் இதைப்பற்றி சிந்தித்திருக்கிறீர்களா?

வாழ்ந்து கொண்டிருக்கிற ஒவ்வொரு மனிதனும் ஒரு வழியில் பயணம் செய்கின்றனர். சரீரப்பிரகாரமாக, நாம் ஜீவனிலிருந்து மரணத்துக்குப் பயணம் செய்கிறோம்.

நாம் பயணம் செய்கின்ற வழி ஒருவேளை ஆவிக்குரிய வாழ்விற்கு வழிநடத்தும் அல்லது ஆவிக்குரிய மரணத்திற்கு வழிநடத்தும், ஆனால் நாம் எல்லாரும் சேரவேண்டிய ஒரு இடத்தை அல்லது மறுமையை நோக்கிச் செல்லுகின்றோம் என்பது ஓர் தப்பித்துக்கொள்ள முடியாத உண்மை ஆகும்.

**நாம் எந்த எல்லையைப் போய் சேருவோம்?**

நீங்கள் இதைப் பற்றி சிந்தித்திருக்கிறீர்களா?

ஜனங்கள், அநேகமாக அனைவரும் நாம் ஆயிரக்கணக்கான வழிகளில் பயணம் செய்வோம் என தீர்மானிக்கின்றனர். அவர்கள் தெரிந்தெடுத்தல் எந்த வித்தியாசத்தை ஏற்படுத்துகிறதில்லை என நினைக்கின்றனர். ஆனால் அவை வித்தியாசத்தையும் ஏற்படுத்துகிறது. உண்மையிலேயே நமது தெரிந்தெடுத்தலானது வாழ்வின் முடிவில் நமது ஆவிக்குரிய வாழ்வைக் கண்டு கொண்டோமா அல்லது மரணத்தைக் கண்டு கொண்டோமா எனத் தீர்மானிக்கும்.

நாம் தேவர்களையும், பழங்கால மதச்சடங்காசாரங்களையும் பின்பற்றலாமா? நாம் மத அநுசரணை முறையையும், தியானத்தால் உண்மையையும், பரம்பொருளையும் காணலாம் என்ற கொள்கையையும்